**தலைப்பு 198 – நீர்ப்பாசன மற்றும் நீர்வள முகாமைத்துவ அமைச்சு**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நீர்ப்பாசன மற்றும் நீர்வள முகாமைத்துவ அமைச்சின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் நீர்ப்பாசன மற்றும் நீர்வள முகாமைத்துவ அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 யூன் 06 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 யூன் 06 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நீர்ப்பாசன மற்றும் நீர்வள முகாமைத்துவ அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முன்னைய ஆண்டிற்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களை முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது. மேலும், இக்காரணத்தால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் இவ்வறிக்கையில் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.6.1 கணக்குகளை சமர்ப்பித்தல்

பின்வரும் அவதானிப்பு செய்யப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வருடாந்த நிதிக்கூற்றுக்கள் | | |
| நிதிக்கூற்றுடனான ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டத்தின் படி செலவினங்கள் நிதிமயப்படுத்தப்பட்டிருக்கும் விதத்தை ACA-2(v) படிவத்தைக் கொண்டு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், நிகழ்ச்சித்திட்டம் 02 அபிவிருத்தி திட்டத்திற்கு அமைவாக அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | அரச கணக்குகள் பணிப்பாளர் அதிபதியின் 267/2018 ஆம் இலக்க மற்றும் 2018 திசெம்பர் 21 ஆந் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் செயல்பட வேண்டியமை | கணக்காய்வில் காட்டப்பட்டுள்ள விடயங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. 02 ஆம் இலக்க அபிவிருத்தி திட்டத்தின் கீழ் நிதிமயப்படுத்தலை தயாரித்த போதிலும், குறித்த நிதி மயப்படுத்தப்பட்ட அறிக்கையை ஒன்று சேர்த்தலின் போது சம்பந்தப்பட்ட படிவம் விடுபட்டுள்ளது. கணக்கறிக்கையை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டதன் பின் அப்படிவம் மீண்டும் கணக்காய்வு அலுவலரிடம் ஒப்படைக்கப்பட்டது. |

#### 1.6.2 நிதிச் செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்பு செய்யப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தொங்கல் கணக்கின் படி வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்காக நீர்ப்பாசன அமைச்சினால் செலுத்தப்பட்ட செலவு ரூபா 7,197,513 ஆயினும் மாதாந்த கணக்குப் பொழிப்பு மற்றும் ஏனைய தகவல்களின் படி அது ரூபா 7,302,120 ஆனதால் ரூபா 104,607 வேறுபாடு | நிதிக்கூற்று சரியாக தயாரிக்கப்பட வேண்டியமை. | இவ்வேறுபாடு செலவு கூடியதனால் ஏற்பட்டுள்ளது. அது மிகுதிக்கான தாக்கம் செலுத்தாது. |

அவதானிக்கப்பட்டது.

### 1.6.3 நிதி நிலைக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதி திகதியில் நிதி நிலைக்கான கூற்றில் அமைச்சுக்கு சொந்தமாக உள்ள சொத்துக்களின் செலவு மற்றும் உபகரணங்களின் பெறுமானம் ரூபா 219,005,345 ஆக இருந்த போதிலும், நிதிசாரா சொத்துக்களுக்கான கூற்றில் அத்திகதியில் காணும் சொத்துக்களின் செலவு மற்றும் உபகரணங்களின் பெறுமானம் ரூபா 45,926,459 குறைவாக அதாவது ரூபா 173,078,887 வாக காட்டப்பட்டு இருந்தது. | சொத்துக்களின் பெறுமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட்டு கணக்கீடு கூற்றுக்களில் உட்படுத்தப்பட வேண்டியமை. | உடன்படுகின்றேன். 2018 வருடத்திற்கான நிதிக்கூற்று சமர்ப்பிக்கும் போது திறைசேரி அச்சுக் குறிப்புக்களின் படி சகல சொத்துக் கணக்குகளின் லெஜர் மிகுதிகளோடு திணைக்கள ஏடுகளின் மிகுதியோடு சமமாக வேண்டுமென ஆலோசனை கிடைத்தமையால் அவ்வாறு சமப்படுத்துவதற்காக திறைசேரி ஏடுகளில் மாற்றுவதற்கான மாற்றுக் குறிப்புக்களால் மூலம் சீராக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | அமைச்சுக்கு சொந்தமான 129 வாகனங்கள் வெவ்வேறு திணைக்களங்கள், அமைச்சுக்கள் மற்றும் நீர் வள சபைக்கு பெற்றுக் கொடுத்த போதிலும், அந்நிறுவனங்களுக்கு உரிமையை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததுடன் அவ்வாகனங்களின் பெறுமானத்தை கணக்கீட்டு நிதிசாரா சொத்துக்களுக்கான கூற்றில் உட்படுத்தப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப் பட்டிருக்கவில்லை. | வெவ்வேறு நிறுவனங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள வாகனங்கள் அந் நிறுவனங்களுக்கு சொந்தமாக பெற்றுக் கொடுப்பதற்கு அல்லது மீண்டும் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | 314 வாகனங்களுள் 148 வாகனங்கள் பாவனை செய்யப்படும் நிறுவனங்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதுடன் மிகுதியை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. மேலும், நிகழ்ச்சித் திட்டங்களில் வாகன நிகழ்ச்சித் திட்டம் முடிவடைந்ததன் பின்பு பெற்றுக் கொள்வதற்கு ஆவனை செய்வேன். |

**1.6.4 அரச உத்தியோகத்தரினது முற்பண கணக்குக்கான இணக்கக்கூற்று**

பின்வரும் அவதானிப்பு செய்யப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இனங்கண்டு கொள்ளப்படாத ரூபா 434,066 ஆக கடன் பணம் முற்பண "பீ" கணக்கில் வருடாந்த இணக்கக்கூற்றில் உட்படுத்தப்பட்டு இருந்ததுடன் மீளாய்வாண்டு முடிவடைந்து இதைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இனங்கண்டு கொள்ளப்படாத மிகுதிகள் தீர்த்துக் கொள்ளப்பட வேண்டியமை. | 15 வருடங்களுக்கும் மேல் பழைமையான ரூபா 434,066 க்கான மிகுதியை இனங்கண்டு கொள்வதற்கு இதுவைர முடியாது உள்ளது. முன்னால் திறைசேரியிடமிருந்து ஆலோசனை பெற்று மேற்படி நடவடிக்கை எடுப்பேன். |

**1.6.5 கட்டுநிதி மிகுதி**

பின்வரும் அவதானிப்பு செய்யப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்த கட்டு நிதி கணக்கின் படி ஏனைய பெறுவனவுகள் பா 22,146,127 ஆக காட்டப்பட்டிருந்த போதும், நிதி செயலாற்றல் கூற்றில் ஏனைய பெறுவனவுகள் ரூபா 13,794,298 ஆக காட்டப்பட்டிருந்தது. அதன்படி ரூபா 8,351,829 வுக்கான வேறுபாடு அவதானிக்கப்பட்டதுடன் அது சம்பந்தமாக ஒப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | நிதி செயலாற்றல் கூற்றில் ஏனைய பெறுவனவுகளாக, மொத்த பெறுவனவுகளில் திறைசேரி கட்டுநிதி வைப்பு பெறுவனவுகள் மற்றும் முற்பண B கணக்கின் கீழ் பெறுவனவுகளை கழிந்ததன் பின்வருமான தலைப்பின் கீழான பெறுமான பெறுமதி காட்டப்பட்டிருந்தது. |

**1.6.6 பத்திரங்கள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை**

அமைச்சினால் கீழேயுள்ள சில பத்திரங்கள் பேணப்படாதிருந்ததுடன் சில பத்திரங்கள் முறையாக மற்றும் நாளதுவரையாக பேணப்படாமை மாதிரி கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருட்களுக்கான நிரந்தர சொத்துக்கான பதிவேடு | | |
| 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் படி நாளதுவரை செய்யப்பட்ட கணனி, உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருள் பத்திரம் நீர்ப்பாசன முகாமைத்துவ பிரிவில் மற்றும் கொத்மலையில் அமைந்துள்ள நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவத்திற்கான சர்வதேச பயிற்சி நிலையத்தில் பேணப்படவில்லை. | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் படி கணனி, உதிரிப்பாகங்கள், மற்றும் மென் பொருட்களுக்கான நிரந்தர சொத்துக்களுக்கான பத்திரம் பேணப்பட வேண்டும். | தற்போது கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருள் பத்திரமொன்று ஆரம்பிக்கப்பட்டு நாளதுவரையாக்கப் பட்டு வருகிறது. |
| (ஆ) பிணை வைப்புப் பதிவேடு | | |
| நிதிப் பிரமாணம் 891(1) பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர் ஊழியர்களின் தகவல்கள் சேகரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 891(1) குறிப்பிட்டுள்ள தகவல்கள் உட்படுத்தும் படியான பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர் பற்றிய பிணை வைப்பு பத்திரமொன்று பேணப்பட வேண்டியமை. | ஏற்றுக் கொள்கின்றேன். முன்னால் பரிந்துரையின் படி நடவடிக்கை மேற்கொள்வதற்கான ஆலோசனை உத்தியோகத்தர் களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. |

## 1.6.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

மாதிரிகளுக்கான கணக்காய்வு ஆராய்வுகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டதிட்ட மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் ஒப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் | எழுதப்பட்டு 06 மாதங்கள் கடந்த காசோலைகள் வருமானமாக பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய | நிதிப்பிரமாணம் 396( d) அமைவாக செயல்பட வேண்டியமை | தீர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| கோவையின் நிதிப்பிரமாணம் 396(ஊ) | போதிலும்ரூபா 36,115 பெறுமதியான காலாவதியான 12 காசோலைகள் சம்பந்தமாக அவ்வாறு செய்யப்படவில்லை. | | |
| 2004 ஒக்டோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க வரவு செலவுக்கான சுற்றறிக்கை | அமைச்சிலிருந்து வெளியே மாற்றலாகி சென்ற 07 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 886,631 ஆனதுடன் பணம் மாற்றலாகி சென்று 02 மாதங்களுக்குள் அறவிட வேண்டியுள்ள போதிலும் அவ்வாறு செய்யப்படவில்லை. | தேசிய வரவு செலவு திணைக்களத்தின் பணிப்பாளரின் 118 ஆம் இலக்க மற்றும் 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய வரவு செலவு சுற்றறிக்கையின் பிரகாரம் செயல்பட வேண்டியமை. | அம்மிகுதிக்கான சிக்கலை விடுவித்துக் கொள்வதற்காக தற்போது மாற்றலாகி சென்ற உத்தியோகத்தர் களிடமிருந்து கடன் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் மிகுதி அளவினை சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களினது சம்பளத்திலிருந்து அறவிடப்பட்டு பெற்றுக் கொள்ளப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டினுள் அமைச்சினால் செய்து முடிப்பதற்கு திட்டமிடப்பட்ட கருமங்களை செய்து முடிப்பதற்காக திட்டமிட்ட கட்டுநிதித் தேவைப்பாடு ரூபா 9,131,157,730 ஆக இருந்தது. திறைசேரியிலிருந்து கோரப்பட்ட மொத்த கட்டுநிதி தேவைப்பாடு ரூபா 6,596,954,000 ஆக இருந்ததுடன் திறைசேரியினால் கொடுக்கப்பட்டிருந்த கட்டுநிதி ரூபா 680,302,000 ஆக இருந்தது. திறைசேரியிலிருந்து கிடைக்கப் பெறாத கட்டுநிதி கோரப்பட்டு கட்டுநிதியில் நூற்றுக்கு 89.69 ஆகும். அக்காரணத்தினால் நிகழ்ச்சித்திட்டம் இலக்கம் 01 மற்றும் 02 கீழான முறையே செலவின விடயங்கள் 03 மற்றும் 05 ஆக | திட்டமிட்ட படி கட்டுநிதியினை பெற்றுக் கொள்ளவும் அதை உபயோகிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டியமை. | கணக்காய்வு தேடுதலில் காட்டப்பட்டுள்ள விடயங்களை ஏற்றுக் கொள்கின்றேன். |

செய்யப்பட்ட ஒதுக்கீடுகளும் பாவனைக் குறைபாடுகளுடன் காணப்பட்டன.

### 2.2 வைப்பு மீதிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 02 வருடங்களுக்கு மேலாக பழைய ரூபா 1,113,522 க்கு ஆன வைப்பு மிகுதிகள் இருப்பதுடன் அவ் வைப்புக்களை நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் வருமானத்துடன் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்த போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 571 அமைவாக செயல்பட வேண்டியமை. | ஒப்பந்தக்காரர்களின் வைப்புப பணம் கோரும்படி அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. முன்னால் நிதிப்பிரமாணம் 571 அமைவாக நடவடிக்கை எடுக்கும் படி நிறுவனத் தலைவர்களை அறிவுறுத்தப்படும். |
| (ஆ) | கொத்மலை சர்வதேச பயிற்சி நிலையத்தில் சேவையாற்றும் ஊழியர்களிடமிருந்து 2017 மற்றும் 2018 வருடங்களில் சம்பளத்திலிருந்து கழித்துக் கொள்ளப்பட்ட ரூபா 927,580 வாகிய அரச ஊழியர்களின் சேமலாப நிதிப்பணம் பங்கீடு செய்யாது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது. | 1942 ஏப்ரல் 01 ஆந் திகதிய 18 ஆம் இலக்க அரசாங்க சேவை சேமலாப நிதியத்தின் சட்ட அதிகாரத்திற்கு அமைய செயல்பட வேண்டியமை. | ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட சமயாசமய தொழிலாளர்களின் சம்பளத்தில் 2017 மற்றும் 2018 வருடங்களில் அறவிடப்பட்ட சந்தா உள்ளன. நிறுவனத்தினால் செலுத்த வேண்டிய நூற்றுக்கு 12 அளவு தேவையான நிதியத்தை பெற்றுக் கொள்வதற்கு முடியாது போனமையினால் கொடுக்கப்படவில்லை. அதை கொடுப்பதற்கான துரித நடவடிக்கை எடுப்பேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பிரதான கருமங்களுக்கு முரணான செயல்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதான மற்றும் மத்திய நீர்ப்பாசன திட்ட திருத்துவதற்காக 2015 ஆம் வருடம் முதல் 2018 ஆம் வருடம் வரை அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டிருந்த | ஏனைய நிறுவனங்களுக்கு சொந்தமான சொத்துக்களை அபிவிருத்தி செய்யும் போது திறைசேரியின் | கணக்காய்வு விசாரிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள முதியன்னேகம வாவியை திருத்துவதற்காக கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 7/3/13 ஆம் |

| | | | |
|---|---|---|---|
| | ஒதுக்கீடுகளில் ரூபா 54,828,946 ஆன பணம் செலவு செய்யப்பட்டு கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு சொந்தமான 03 வாவிகள் திருத்தப்பட்டிருந்தன. ஆயினும், அதில் ரூபா 3,709,955 செலவு செய்யப்பட்டு திருத்தப்பட்ட முதியன்னேகம வாவி மூலம் பயிர் செய்து கொண்டிருந்த வயற்காணி 15 ஏக்கரில் பதின்நான்கு நிரப்பப்பட்டு நிரப்பப்பட்ட நிலமாக ஆக்கப்பட்டிருந்தது. | முறையான அங்கீகாரத்தை மற்றும் ஒதுக்கீடு பெற்றுக் கொள்ளப்பட வேண்டியமையும் மற்றும் அமைச்சுக்கான செலவு தலைப்பிலிருந்து செலவுகளை மேற்கொள்வது குறித்து ஆராய்ந்து பார்த்து முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | இலக்க ஐ.கா.லி/குரு 2017 ஆகிய 2017 செப்டம்பர் 21 ஆந் திகதிய கடிதம் மூலம் அமைச்சுக்கு அங்கீகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. ஏனைய வாவிகளின் திருத்தங்களுக்காகவும் விவசாய இயக்கங்களின் வேண்டுகோளின் படி பிராந்திய கமநல சேவை உத்தியோகத்தர்களின் உடன்பாட்டை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றது. |
| (ஆ) | முதியன்னேகம வாவி, குடாகாலே வாவி, பம்பதெனிகம வாவி ஆகிய வாவிகளின் திருத்த வேலைகள் நீர்ப்பாசன மற்றும் நீர்வள முகாமைத்துவ அமைச்சின் ஒதுக்கீடுகளிலிருந்து நீர்ப்பாசன திணைக்களத்தைக் கொண்டு செய்வித்து கொள்வதற்கு கொள்கை அளவிலான தீர்மானத்தை பெற்றுக் கொள்வதற்கு காரணமான விடயம் குறித்து கோப்புக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | சகல தகவல்களும் கோப்புக்களில் உட்படுத்தப்பட்டிருக்க வில்லை. | கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் இது போன்ற சிறிய வாவிகள் அதிக அவைகளை திருத்துவதற்கான போதிய ஒதுக்கீடு மற்றும் தொழில்நுட்பத் திறன் அத்திணைக்களத்திற்கு போதியளவு இல்லை. மேலும், இச்சிறு வாவிகள் நீர்ப்பாசன செயற்படுவதனால் அவைகளின் வினைத்திறன் மற்றும் உற்பத்தித் திறனுக்காக இச்சிறுவாவிகளின் செயற்பாடுகளும் ஏதுவாகும். |
| (இ) | பம்பதெனிகம வாவியை திருத்தும் வேலைகளின் பொது வயல்களுக்கு நீரை பாய்ச்சுவதற்காக கட்டப்பட்ட வாய்க்காலின் மேல் போடப்பட்டிருந்த கொன்கீறீட் பலகை இரண்டாக பிளந்து இருந்தமை, வாவியிலிருந்து வயல்களுக்கு நீரை கொண்டு செல்வதற்கான சம்பந்தப்பட்ட கால்வாய் நிர்மாணிக்கப்படாமை ஆகிய குறைபாடுகளுக்கு அவதானிக்கப்பட்டன. | நியமங்களுக்கு புறம்பான நிர்மாணப் பணிகள் குறித்து தேடிப் பார்த்து ஆவண செய்ய வேண்டியமை. | அப்புதையுண்டதனை அவதானிக்கப்பட்டு வருவதுடன் அவ்விரிசலுக்கான விசேட சிமெந்து கலவை இடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. பம்பதெனிகம வாவியிலிருந்து வயல்களை விரைவில் நிர்மாணிக்கப்பட இருக்கும் சம்பந்தப்பட்ட கால்வாய்க்கான பொறியியல் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருந்த வெளி வான் மேலிருந்து கீழ் வரை சுமார் 1 மீட்டர் தூரத்திற்கு 09 இடங்களில் வெடித்து இருந்தமை, ஒரு இடம் அடி மட்டத்திலிருந்து மேல் வரையிலும் வெடித்து இருந்தமை மற்றும் வெளிவானை நிர்மாணிப்பதற்காக இடப்பட்டிருந்த கொன்கீறீட் பதப்படுத்தப்படாமை ஆகிய குறைபாடுகள் இருந்தன. | - மேற்படி - | வெளிவான் இறுதி அடி மட்டத்திலான சுவர் (Cut of Wall) இதுகால் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் கணக்காய்வு விசாரிப்பில் குறிப்பிடப்பட்டு இருந்தவாறு விரிசல் 2017 ஆம் வருடம் நிர்மாணிக்கப்பட்ட வெளிவான் சுவரில் (Crest Wall) ஏற்பட்டிருந்தது. அவை மேற்பரப்பில் காணக்கூடிய (Surface crack) விரிசலாக இருந்ததுடன் சென்ற மழைக்காலம் இவ்வாவி நிறைந்து வான் இட்டு பாய்ந்தும் விரிசல்களிலிருந்து எவ்வித நீர்க்கசிவும் ஏற்படவில்லை. அதிக வெப்பமான கால கட்டத்தில் செய்யப்பட்ட நிர்மாணிப்பில் மேற்பரப்பில் ஏற்பட்ட விரிசலை விசேட சீமெந்து கலவையிட்டு திருத்தப்பட்டுள்ளது. இப்போதைக்கும் இவ்வாவி நிறை மட்டத்தை விட சுமார் ஒரு அடி அளவு நீர் குறைவாக காணப்படுகின்றது. |
| (உ) | முதியன்னாகம வாவியை சுற்றி வாகனம் செல்லக்கூடிய வகையில் வாவி சுவரைச் சேர்த்து மண் நிரைக்கப்பட்டு பாதையொன்று தாபிக்கப்பட்டு வாவிக்கு தண்ணீர் பாய்ந்து வரும் வாவியின் நீரேந்து பகுதியான வாவியின் மேற்பகுதி அடைக்கப்பட்டிருந்தது. வாவிக்கு சேதம் ஏற்படும் வகையில் வாவியை சுற்றி வாவியின் மேற்பகுதியில் பாதையொன்றை தாபிப்பதன் மூலம் எல்லங்கா முறைமைக்கும் சேதம் ஏற்பட்டிருந்தது. | வாவி திருத்தப்படு கையில் எல்லங்கா முறைமை காப்பாற்றப்பட வேண்டியமை. | நீர்ப்பாசன திணைக்களத்தில் விசாரிக்கப்பட்டுள்ளது. |
| (ஊ) | கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு சொந்தமான குடாகலே வாவியை திருத்தப்படுவதற்காக 2016, | அமைச்சின் செயலாளரின் தலைப்புக்களில் வேறு தலைப்புக் களுக்காக | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 7/3/13/ஜ.கா.லி குரு/2017 ஆம் இலக்க மற்றும் 2017.09.21 ஆந் திகதிய கடிதத்தில் |

| | | |
|---|---|---|
| 2017 மற்றும் 2018 ஆகிய வருடங்களில் அமைச்சினால் ரூபா 6,195,216 செலவிடப்பட்டிருந்த போதிலும், வாவியின் வாய்க்கால் உடைந்திருந்ததனால் வாவியில் சேரும் நீரை பயிர்ச்செய்கைக்கு உபயோகப்படுத்த முடியாமல் இருந்தது. குடாகலை வாவியால் வளம் பெறச்செய்யும் மொத்த 95 ஏக்கரில் 32 ஏக்கர் 03 றூட் 30 பேர்ச்சசை ஒரு நபரால் பூர்விக விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அது மொத்த வயல் அளவில் சுமார் நூற்றுக்கு 34 ஆக இருந்தது. 2019 சனவரி 09 ஆந் திகதி செய்யப்பட்ட கள ஆய்வின் போது அந்த 95 ஏக்கர் வயலும் பயிர் செய்யப்படாது இருந்ததுடன் வாவியை திருத்தப்படுவதற்காக செலவு செய்யப்பட்ட ரூபா 6,195,216 முழுத்தொகையும் உபயோகமற்ற செலவாக இருந்தது. | செலவு செய்வதற்கு அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்குநட வடிக்கை எடுக்க வெண்டியதுடன் பிரேரிக்கப்பட்ட வயல்களை பயிரிடுவதற்கு தேவையான ஆவனை செய்யப்பட வேண்டும். | நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவ அமைச்சின் செயலாளருக்கு குறித்த வாவிகளை திருத்துவதற்கான அங்கீகாரத்தினை பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்ததுடன் அதன்படி வாவியின் திருத்த வேலைகள் செய்யும் போது அப்புறப்படுத்தப்பட்ட சேற்றினை விவசாய இயக்கத்தின் வேண்டுகோளின் படி காபனிக் உரம் செய்வதற்காக பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. திருத்து வேலைகளுக்காக மதிப்பிடு தயாரிக்கும் போது கால்வாயினை திறப்பதற்கான பிரச்சினை இருக்காமையினால் அதற்கான எதுவித மதிப்பீடு தயாரிப்பதற்காகவோ திருத்த வேலை நீர்ப்பாசன திணைக்களத்தினால் செய்யப்படவில்லை. சில வருடங்களாகக் கால்வாய் கதவினை திறக்கப்படாதது இதற்கு காரணமாக இருக்கலாம். அத்துடன் கால்வாயின் நல்ல நிலைக்கு கொண்டு வந்ததன் பின்னர் சம்பந்தப்பட்ட வாவியில் சேரும் தண்ணீரை கொண்டு பயிர்ச்செய்கையினை மேற்கொள்ளலாம். |

## 3.2 சொத்துக்களுக்கான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆம் வருடம் முன்னாள் அமைச்சரிடம் கையளிக்கப்பட்ட ரூபா 640,354 பெறுமான சொத்துக்கள் மீளப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சொத்துக்களை மீளப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குறித்த சொத்துக்களை மீளப் பெற்றுத் தரும் படி தெரிவித்திருப்பதடன் முன்னாள் அவைகளை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.3 நட்டங்களும் இழப்புக்களும்

பின்வரும் அவதானிப்பு செய்யப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அமைச்சில் நடக்கும் இழப்புக்கள் மற்றும் நட்டங்கள் சம்பந்தமாக அறியத் தருவதற்கும் அறவிடுவதற்குமான முறையான செயற்திட்டமொன்று பின்பற்றப்படவில்லை. | நட்டங்களையும் இழப்புக்களையும் மீளப் பெறுவதற்கான முறையான திட்டமொன்று பின்பற்ற வேண்டியமை | அமைச்சின் இழப்புக்களையும் நட்டங்களையும் அறவிடுவதற்குமான முறையான திட்டமொன்று முன்னால் ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.4. முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்பு செய்யப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கமநல அபிவிருத்தி திணைக்களத்துக்கு சொந்தமான கும்புக்கடவல வாவியின் உரிமையை நீர்ப்பாசன அமைச்சு சுவீகரித்துக் கொள்ளல் மற்றும் திருத்தப்படுவதற்கான அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டிருக்காத நிலையில் கல்கமுவ பிராந்திய நீர்ப்பாசன பொறியியல் காரியாலயத்தினால் ரூபா 11,535,000 க்கு ஆன மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு வாவியின் அணைக்கட்டில் உள்ள 140 மரங்களை அகற்றுவதற்கு குறிப்பிடப்பட்டிருந்தது. | அமைச்சுடன் தொடர்புடைய அலுவலகர்களை அமைச்சின் செலவின தலைப்புக்களின் கீழ் செயல்படுத்தக் கூடாதன. | இது பற்றி நீர்ப்பாசன திணைக்களத்திடம் விசாரிக்கப்பட்டுள்ளது. |

### 4. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) கொத்மலை பயிற்சி நிறுவன அங்கீகரிக்கப்பட்ட பணிக்குழாம் 30 ஆக இருந்ததுடன் உண்மையான | வெற்றிடங்களை நிரப்புவதற்கான துரித நடவடிக்கை எடுக்க | ஏற்றுக் கொள்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| | பணிக்குழாம் 14 ஆக இருந்ததுடன் 16 வெற்றிடங்கள் இருந்தன. | வேண்டியமை அல்லது தேவையற்ற பதவிகள் இருப்பின் அவைகளை இல்லாது செய்வதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | |
| (ஆ) | அங்கீகரிக்கப்பட்ட 06 பதவிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையை விட 15 பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர். அங்கீகரிக்கப்பட்ட 04 தொழிலாளர் பதவிகளுக்கு ஆட்கள் சேர்த்துக் கொள்ளப்படாதிருந்ததுடன் ஒப்பந்த அடிப்படையில் 28 பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டு சம்பளம் மற்றும் கொடுப்பனவான மீளாய்வாண்டில் ரூபா 19,577,330 செலுத்தப்பட்டிருந்தது. | முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் சுற்றறிக்கை பிரகாரம் செயல்பட வேண்டியமை. | கணக்காய்வு விசாரிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களுக்கு விடையளிப்பதற்கு கொத்மலை சர்வதேச பயிற்சி நிலையத்தின் பொறுப்பதிகாரியடம் விசாரிப்பதுடன் விளக்கம் கிடைத்ததும் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | சனாதிபதி செயலாளரின் CA/1/17/1 இலக்க மற்றும் 2010 மே 10 ஆந் திகதிய சுற்றறிக்கையின் 2.1 பந்தியின் பிரகாரம் அமைச்சரின் தனிப்பட்ட பாதுகாவலர்களுக்கு அமைச்சு மற்றும் திணைக்கள ஒதுக்கீடுகளிலிருந்து கொடுப்பனவு செய்ய முடியாதிருந்த போதிலும், அமைச்சினாலும் திணைக்களத்தினாலும் முறையே ரூபா 2,200,000 மற்றும் ரூபா 915,611 ஆக மொத்தம் ரூபா 3,115,611 செலுத்தப்பட்டிருந்தன. | சுற்றறிக்கை ஆலோசனைப் படி செயல்பட வேண்டியமை. | கணக்காய்வு விசாரிப்பில் முன்வைக்கப்பட்டுள்ள விடயங்கள் உண்மையென ஏற்றுக் கொள்வதுடன் அப்போதைய விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் கடுமையான வேண்டுகோளின் படி இத்தனிப்பட்ட பாதுகாவல் உத்தியோகத்தர்களுக்கான கொடுப்பனவு செலுத்துவதற்கு அப்போதைய உத்தியோகத்தர்களுக்கு நேர்ந்துள்ளமை அவதானிக்கப்படுகின்றது. கனம் அமைச்சரை சந்திக்க வரும் பொது மக்களை வழி நடத்துவது தறடறுதட அவருடைய பாதுகாப்புக்காக அமைச்சருக்கு நம்பிக்கையான நபர்களை ஈடுபடுத்த வேண்டுமென கண்டிப்பாக இருந்தமையினால் அப்போதைய செயலாளரின் அனுமதியுடன் அத்தனிப்பட்ட பாதுகாவல் |

| | | | |
|---|---|---|---|
| | | | உத்தியோகத்தர்களை சேவையில் ஈடுபடுத்தி கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதை தயவுடன் அறியத்தருகின்றேன். முன்னால் இவ்வாறு நடக்காதிருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் மேலும் தெரிவித்துக் கொள்கின்றேன். |
| (ஈ) | கொத்மலை நீர்ப்பாசன மற்றும் நீர்முகாமைத்துவக்கான சர்வதேச பயிற்சி நிலையத்திற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியின்றி 05 பதவிகளுக்காக 06 பேர் நிலையத்தினால் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர். முகாமைத்துவ பதவி ஒன்று மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதற்காக 10 பேரும் சமயாசமய அடிப்படையில் 25 தொழிலாளர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர். | முகாமைத்துவ சேவைகள் திணைக்கள பணிப்பாளர் நாயதக்தின் DMS/1285 ஆம் இலக்க 2016 யூலை 01 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் செயல்பட வேண்டியமை | ஏற்றுக் கொள்கின்றேன். |
| (உ) | கொத்மலை நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவத்திற்கான சர்வதேச பயிற்சிக்கான 07 விரிவுரையாளர் பதவிகள் அனுமதிக்கப்பட்டிருந்த போதிலும், அவ்விரிவுரையாளர்களை சேர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமல் வெளிவிரிவுரையாளர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர். 2017 மற்றும் 2018 வருடங்களில் முறையே வெளிவிரிவுரையாளர் 25 பேருக்கும் மற்றும் 11 பேருக்கும் ரூபா 1,100,835 மற்றும் ரூபா 699,400 என்ற முறையில் மொத்தமாக ரூபா 1,800,235 செலுத்தப்பட்டிருந்தன. | முகாமைத்துவ சேவைகள் திணைக்கள பணிப்பாளர் நாயதக்தின் DMS/1285 ஆம் இலக்க 2016 யூலை 01 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் செயல்பட வேண்டியமை | ஏற்றுக்கொள்கின்றேன். தேவையான ஆட்சேர்ப்புக்கான நடவடிக்கை எடுக்கும் படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. |